<u>செய்தி வெளியீடு எண்.865</u> <u>நாள்.15.10.2008</u>

தமிழ்நாடு பல்லுயிர்ப்பரவல் வாரியம், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. என்.செல்வராஜ் அவர்களை தலைவராகக் கொண்டு, அரசு ஆணை எண்.38, சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை (எப்.ஆர்.5) நாள்.29.5.2008–ல் உருவாக்கப்பட்டடது. இந்த வாரியத்தின் உறுப்பினர்களாக 5 அலுவல் தொடர்பான உறுப்பினர்களும் மற்றும் 5 வல்லுனர் உறுப்பினர்களும் உள்ளனர்.

<u>மாநில பல்லுயிர்ப்பரவல் வாரியத்தின் பணிகளாவன:</u>

ஏ. மத்திய அரசினால் வெளியிடப்படும் யாதொரு விதிமுறைகளுக்கு உட்பட்டு, மாநில அரசுக்கு பல்லுயிர்ப்பரவல் பாதுகாப்பு, அதன் அங்கங்களின் நிலையான பயன்பாடு உயிரியல் வளப்பயன்பாட்டின் மூலம் கிடைக்கும் பயன்களை சமத்துவமுறையில் பகிர்ந்து கொள்ளுதல் போன்ற விஷயங்களில் ஆலோசனை அளித்தல்.

பி. இந்தியர்கள் யாதொரு உயிரியல் வளத்தின் மீதான வணிகப் பயன்பாடு போன்றவற்றிற்கு விண்ணப்பம் அளித்திடும் போது அளிக்கப்படும் அனுமதி அல்லது மாறான ஆணைகளை ஒழுங்குபடுத்துதல்.

சி. மேலும் இச்சட்டத்தின் ஷரத்துக்களின் படியான செயல்களை நிறைவேற்றிடத் தேவையான இன்னபிற பணிகள் அல்லது மாநில அரசினால் குறித்துரைக்கப்படும் பணிகளை செயல்படுத்துவது, சில செயல்களை கட்டுப்படுத்துவதற்கான மாநில பல்லுயிர்ப்பரவல் வாரியத்தின் அதிகாரம்.

தமிழ்நாடு பல்லுயிர்ப்பரவல் வாரியத்தின் முதல் கூட்டம், 14.10.2008 அன்று முற்பகல், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. என்.செல்வராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், தமிழ்நாடு வனத்துறை, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர், முதன்மை அரசு செயலர், சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை, முதன்மை அரசு செயலர், கால்நடை மற்றும் மீன்வளத்துறை, துணை வேந்தர், தமிழ்நாடு கால்நடை மற்றும் விலங்குகள் பல்கலைக்கழகம், முனைவர் அ. மாணிக்கம், தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், முனைவர் எஸ்.நடராஜன், திரு. எஸ். சுப்ரமணியன், திரு.எஸ்.கொண்டாஸ், இ.வ.ப., (ஓய்வு) ஆகிய உறுப்பினர்கள் இதில் கலந்து கொண்டு, பல்லுயிர்ப்பரவல் சட்ட விதிகளை செயல்படுத்துவது மற்றும் தமிழ்நாடு பல்லுயிர்ப்பரவல் வாரியத்தின் செயல்பாட்டுக்கான வழி முறைகளை ஆலோசித்தனர்.

---

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.